DINAMALAR 20 AUG 2023 PAGE 2




■ புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் சாகித்திய அகாதமி சார்பில் நடந்த இலக்கிய வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்கு என்ற தலைப்பிலான உரையரங்கில் பொதுக்குழு உறுப்பினர் பூபதி பேசினார்.

# சாகித்திய அகாதெமியின் உரையரங்கம் நிகழ்ச்சி

**புதுச்சேரி, ஆக. 20–**

சாகித்திய அகாதெமி மற்றும் சமுதாய கல்லூரி சார்பில் இலக்கிய வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்கு என்ற தலைப்பில் உரையரங்கம் நடந்தது.

சென்னை சாகித்திய அகாதெமி அலுவலக பொறுப்பாளர் சந்திரசேகர ராஜி வரவேற்றார். பொதுக் குழு உறுப்பினர் பூபதி பெரியசாமி அறிமுக உரையாற்றினார். கலை பண்பாட்டு துறை இயக்குநர் கலியபெருமாள், சமுதாய கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன், தமிழ்த் துறை தலைவர் மாலதி வாழ்த்துரை வழங்கினர்.

முதல் அமர்வில் தமிழ்மல்லன் தலைமையில், தமிழ் மொழி வளர்ச்சி என்ற தலைப்பிலும், சிறுவர் சிறுகதைகள் என்ற தலைப்பில் கன்னிக்கோயில் ராஜா, புதுக்கவிதை என்ற தலைப்பில் மயிலாடுதுறை இளைய பாரதி உரையாற்றினர்.

இரண்டாவது அமர்வுக்கு தலைமை ஏற்ற புதுச்சேரி சீனு தமிழ் மணி துளிப்பா, சிறுவர் பாடல்கள் தலைப்பில் உரையாற்றினார். கட்டுரை, மரபுகவிதை என்ற தலைப்பில் ரத்தின புகழேந்தியும், மொழிபெயர்ப்பு, நூல் மதிப்புரை தலைப்பில் பல்லவிக்குமார், சிறுகதை, தொடர்கதை தலைப்பில் எழுத்தாளர் சுப்ரமணிய பாண்டியன் உரையாற்றினர்.

சாகித்ய அகாதெமி தமிழ் ஆலோசனை குழு உறுப்பினர் முருகையன் நன்றி கூறினார்.